# 1
# தவ்ஹீத் – ரிஸாலத் – மஆத்


அல்லாஹ் அனைத்தினதும் படைப்பாளன். தனித்துவமானவன்; ஏகன்; எல்லா வற்றையும் நிர்வகிப்பவன்; சக்தி படைத்தவன்; தேவையற்றவன்; நிகரில்லாதவன்; அனைத்தும் அவனது நாட்டப்படியே நடக்கின்றன. அவன் ஒன்றைப் படைக்க நாடினால் ‘குன்’ (ஆகுக) என்ற அவனது கட்டளை மாத்திரம் போதுமானது. இத்தகைய வல்லமை நிறைந்த அல்லாஹ்வை உறுதியாக நம்புவதை ஈமான் என்று அழைக்கின்றோம். இந்த நம்பிக்கை ஒருவனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிவதோடு அதன் வெளிப்பாடாக ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ என்ற கலிமாவை மொழிபவனே முஃமின் (விசுவாசி) ஆவான். அவன் அல்லாஹ்வின் கட்டளைகளைத் தன் வாழ்வில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் அவனது ஈமான் பூரணமடையும்.

உண்மையான ஈமான், முஃமினின் வாழ்வில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அவனை நற்செயலின்பால் தூண்டுவதோடு தீமைகளிலிருந்து விலகி நடக்கவும் துணை புரியும்.

இங்கு நாம் ஈமானின் முக்கிய பகுதிகளான தவ்ஹீத், ரிஸாலத், மஆத் பற்றிச் சிறிது நோக்குவோம்.

## தவ்ஹீத்

**தவ்ஹீத்** என்பதன் பொருள் **ஏகத்துவம்** என்பதாகும். இது அடிப்படையானதாகும். தவ்ஹீத் மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவை முறையே



1. தவ்ஹீத் ருபூபிய்யத்
2. தவ்ஹீத் உலூஹிய்யத்
3. அஸ்மா வஸ்ஸிபாத்

**தவ்ஹீத் ருபூபிய்யத்** – மனிதன், விலங்குகள், கோள்கள் உட்பட பிரபஞ்சம் அனைத்தையும் அல்லாஹ் படைத்துப் பரிபாலிக்கின்றான். ஜீவராசிகளைப் போசிக்கின்றான். வாழ்வையும் மரணத்தையும் அவற்றுக்கு வழங்குகின்றான். அல்லாஹ்வின் இச்செயற்பாடுகளே ‘ருபூபிய்யத்’ எனப் படுகின்றது. இச் சொல் ‘ரப்’ என்ற சொல்லிலிருந்து வந்ததாகும்.



அல்லாஹ்வை மாத்திரம் 'ரப்' ஆக ஏற்றுக் கொள்வதே 'தவ்ஹீத் ருபூபிய்யத்' ஆகும். 'ருபூபிய்யத்' என்ற இப்பகுதி, பொதுவாக அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும்.

ஜாஹிலிய்யாக் கால அரபு மக்கள் கூட தவ்ஹீத் ருபூபிய்யத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**''அவர்களிடம் நீங்கள், வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்? சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தியவன் யார்? என்று கேட்டால், நிச்சயமாக அல்லாஹ்வே என்று கூறுவார்கள்.''** (29: 61)

***தவ்ஹீத் உலூஹிய்யத் -*** தவ்ஹீதின் இரண்டாம் பகுதி தவ்ஹீத் உலூஹிய்யத் ஆகும். இந்தச் சொல் இலாஹ் என்ற சொல்லிலிருந்து உருவானதாகும். இது நான்கு கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

- வணங்கத் தகுதியானவன்
- பிரார்த்தனை புரிவதற்குத் தகுதியானவன்
- வாழ்க்கைக்கான ஹலால் - ஹராம் சட்டங்களை வகுக்கத் தகுதியானவன்
- அன்பு வைக்க மிகவும் தகுதியானவன்

இந்த விடயங்களில் அல்லாஹ்வுக்கு இணையாக எவரும் எதுவும் கிடையாது என உறுதியாக நம்புவதே 'தவ்ஹீத் உலூஹிய்யத்' ஆகும். இதனை ஏற்பதில் வரலாறு நெடுகிலும் மனிதர்கள் பிளவுபட்டுள்ளனர். சிலர் ஏற்றனர்; சிலர் நிராகரித்தனர். ஜாஹிலிய்யாக்கால அரபு மக்கள் இலாஹ் என்பதன் பொருளை நன்கு அறிந்திருந்ததன் காரணமாக அதனைக் கடுமையாகவே எதிர்த்தனர்;இதன்மூலம் தமது அதிகாரமும் செல்வாக்கும் இழக்கப்பட்டுவிடுமோ என அஞ்சினர். மனோ இச்சைப்படி வாழ முடியாமல் போகும் என நினைத்துக் கதிகலங்கினர்.

தவ்ஹீத் பூரணமடைவதற்குத் தவ்ஹீத் ருபூபிய்யத்துடன் தவ்ஹீத் உலூஹிய்யத்தும் ஏற்கப்படுவது இன்றியமையாததாகும்.

***தவ்ஹீத் அஸ்மாஉ வஸ்ஸிபாத் -*** தவ்ஹீதின் மூன்றாம் பகுதி 'தவ்ஹீத் அஸ்மாஉ வஸ்ஸிபாத்' என்பதாகும். அல்லாஹ்வை 'ரப்' ஆகவும் 'இலாஹ்' ஆகவும் ஏற்றுக்கொண்ட மனிதன் அல்லாஹ்வின் பண்புகளையும் அவனுக்கான அழகுத் திருநாமங்களையும் அவன் கூறியுள்ளவாறு ஏற்று நம்ப வேண்டும். அவை அல்லாஹ்வுக்கே உரிய தனித்துவமானவை என ஏற்றுக்கொள்ள வேண்டும். இம்மூன்று பகுதிகளையும் ஏற்பதன் மூலமே ஒருவனின் தவ்ஹீத் பற்றிய நம்பிக்கை பூரணமடையும்.

## *ரிஸாலத்*

*தவ்ஹீதுக்கு அடுத்து ஈமானின் முக்கிய அம்சங்களில் ஒன்றுதான் 'ரிஸாலத்' மீதான நம்பிக்கையாகும். **ரிஸாலத்** என்பது **தூதுத்துவத்தைக்** குறிக்கும். உலகில் அல்லாஹ் தனது பிரதிநிதியாக மனிதனைப் படைத்தான். அவன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற நேர்வழிகாட்டல்களை வழங்கினான். அந்த வழிகாட்டல்களை வழங்க மனிதர்களில் விசேடமான பலரைத் தெரிவுசெய்தான். அவர்களே நபிமார்களும் ரஸூல்மார்களும் ஆவர்.*

*அவர்கள் வஹி மூலம் தமக்கு அருளப்பட்ட வேதங்களையும் ஸுஹுபுகளையும் கொண்டு தங்களது சமூகங்களை நல்வழிப்படுத்தினார்கள். நபிமார்களில் சிரேஷ்டமானவர்கள் ரஸூல்மார்கள் ஆவர். நபிமார்களிலும் ரஸூல்மார்களிலும் இறுதியானவரே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆவார். இதனால் இவர் 'காத்தமுன் நபிய்யீன்' (நபிமார்களில் இறுதியானவர்) எனவும் அழைக்கப்படுகின்றார். இவற்றை உறுதியாக நம்புவதே ரிஸாலத் மீதான நம்பிக்கையாகும்.*

## *மஆத்*

*ஈமானின் அடுத்த முக்கிய பகுதி 'மஆத்' பற்றிய நம்பிக்கையாகும். **மரணத்தின் பின்னர் உள்ள வாழ்க்கையே மஆத் எனப்படுகின்றது.** இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின்படி வாழ்க்கை மரணத்தோடு முற்றுப் பெறுவதில்லை. நிரந்தரமான, நித்தியமான வாழ்க்கை மறுமை வாழ்க்கையாகும். உலகில் வாழும்போது மனிதன் செய்த ஒவ்வொரு செயற்பாடுகள் குறித்தும் மறுமையில் விசாரிக்கப்படுவான். விசாரணையின் முடிவுகளுக்கு ஏற்ப வெகுமதியோ தண்டனையோ அங்கு வழங்கப்படும். உலக வாழ்வில் இறை கட்டளைகளின் பிரகாரம் வாழ்ந்த நல்லோருக்கு சுவனம் வழங்கப்படும். இறை கட்டளைகள், சட்டங்களைப் புறக்கணித்து வாழ்ந்த தீயவர்களுக்கு நரகம் வழங்கப்படும். இதுவே மஆத் - மறுமை நம்பிக்கையின் சாராம்சமாகும்.*

***இவ்வாறாக தவ்ஹீத், ரிஸாலத், மஆத் ஆகிய ஈமானின் முப்பெரும் பகுதிகளையும் அதனுடன் தொடர்பான ஏனைய பகுதிகளையும் உறுதியாக நம்பி எமது ஈமானைப் பூரணப்படுத்திக் கொள்வோம்.***

### பயிற்சி

*சுருக்கமான விடை தருக.*

1. *'விசுவாசி' என்ற சொல் அரபு மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?*
2. *தவ்ஹீத் என்பதன் பொருள் யாது?*
3. *ருபூபிய்யத் என்பது யாது?*
4. *ஜாஹிலிய்யாக் கால அரபு மக்கள் தவ்ஹீதின் எப்பகுதியை நிராகரித்தனர்?*
5. *நபிமார்களில் சிரேஷ்டமானவர்கள் யாவர்?*
6. *மஆத் என்பது யாது?*
7. *இலாஹ் என்ற பதத்தின் கருத்து யாது?*